ORIGINAL ARTICLE

# திருமந்திரத்தில் உபதேசம் [TIRUMANTIRATTIL UPATĒCAM]

## PREACHINGS IN THIRUMANDIRAM

இரா.வள்ளி / R.Valli *[1]

[1] Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts and Science College Mailam, Tamilnadu, India. Email: valli23111980@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/170

**Abstract**

Thirumoolar has written Thirumandiram under 9 Tantras based on 9 agamas. (It is said that there were originally 28 agamas and only 9 were taught to Tirumular by his Guru) First 4 tantrams of Tirumandiram explains Aram, Porul, Inbham and Veedu (together known as Nan-marai - Tamil vedam) The other portion describe the way of worship, based on the agamas. It is enough if we remember that Agamas and Tamil vedas are known as Arumarai explaining the philosophy. Those explaining the way of worship and also praising that Supreme Power are Tirumurai. Tirumandiram is both Arumarai and Tirumurai. Herein an attempt has been made to understand the contents of a few of the verses of that great work: Pathy-Pasu-Pasam is the crux of Saivite philosophy. Pathy represents the Supreme, Pasu represents the Jeeva and Pasam represents ego, karmam and maya. Pathy is anadhy i.e. beginingless and also eternal. Pasu and Pasam have also no beginning but they have an end in the sense that ultimately, they become one with Pathy. Ego is the cause of birth. This study tries to attempt the Preaching of Thirumantra. Library research was done and explanatory method was adopted for this study. Findings of this study was having taken birth one should meditate Panchaksharam thereby he attains the stage of Sivayogi. "Chetthiruppar Sivayogiargal" - they are with the physical body, apparently dead. They (Sivayogiargal) outlive non-understanding and mis-understanding (avaranam and vikshepam) and ego (sense of I and mine) They are awake in the apparent sleep.

**Keywords:** God's Grace, Illusion, Perfectness, Saivism, Physical body.

**ஆய்வுச் சாரம்**

சைவசமயத் தோத்திர சாத்திர நூல்கள் தொகுக்கப் பெற்று பன்னிரு திருமுறை எனப் பெயர் பெறுகின்றன. இவற்றுள் முதல் ஒன்பது திருமுறைகளும், பதினோராம் திருமுறையும் ஆன்மீக நெறியில் ஆழ்ந்திருந்தோர் வெளியிட்ட உணர்ச்சிப் பொழிவுகள். பன்னிரண்டாம் திருமுறை அடியவர்களுடைய வாழ்க்கையை எடுத்துரைப்பது. பத்தாம் திருமுறையான திருமந்திரம்

இவற்றிலிருந்து மாறுபட்டு அமைகின்றது. சைவசமயக் கருத்துக்களை முதன் முதலாக விளக்க எழுந்த முழுமுதல் நூலான இது, மற்ற நூல்களைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது. ஆன்மீகமும் தத்துவமும் இறையுணர்வும் கலந்த நூலாகத் திருமந்திரம் விளங்குகிறது. திருமூலர் திருமந்திரத்தை "ஆகமம்" என்றே அழைக்கிறார். இறைநெறி குறித்து தமிழில் பாடுவதற்காகவே இறைவன் தன்னைப் படைத்ததாகக் கூறுகிறார். என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என நூலின் தோற்றுவாய் அமைகின்றது. இறைவனது மொழியான சிவாகமத்தைத் தாம் கூறுவதாகவும் உரைக்கிறார். வாழ்க்கையின் பல்வேறு நிலையினையும் கண்டு தெளிந்த இவரைச் சிவயோகத்தில் அமர்ந்த யோகி என்பர். இக்கட்டுரை நூலாய்வாக மேற்கொள்ளப்பட்டு, விளக்கமுறை அணுகுமுறையை மேற்கொண்டுள்ளது. இவ்வாய்வின் நோக்கமாக திருமந்திரத்திலுள்ள ஒன்பது தந்திரங்களுள் முதல் தந்திரத்தின் முதல் பகுதியாக உபதேசத்தைப் பற்றி ஆராய்கிறது. இப்பகுதியில் 30 பாடல்கள் உள்ளன. குரு சீடனுக்குக் கூறும் வாசகமே உபதேசமாகும். குரு உபதேசத்தால் சீடனது அருட்கண் விழிப்படையும். சித்தாந்தத் தத்துவக் கூறுகளுள் அடிப்படையாக விளங்கும் பதி, பசு, பாசம் எனும் மூன்றையும் விளக்கும் பகுதியான உபதேசப்பகுதியை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கருச்சொற்கள்:** மலரிபாகம், மாயை, சித்து,சைவம், பரு உடல்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 21th June 2021, revised 19th July 2021, accepted 1th August 2021

**முன்னுரை**

உலகிலுள்ள உயிர்கள் யாவும் வாழவே விரும்புகின்றன. எது வாழ்வு என்பதை அவை அறிவதில்லை. செல்வச் சிறப்புடன் எல்லா நலங்களும் இனிதமைய ஐம்புல இன்பங்களை ஆரத்துய்த்து வாழும் வாழ்க்கையே வாழ்வு என அனைவரும் கருதுவர். எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும் என்பர் தொல்காப்பியர். மக்கள் கருதும் வாழ்வு உலக இன்பங்களால் மகிழ்வது. ஐம்புலன்களால் நுகரப்பெறும் இவ்வாழ்க்கை நிலையற்றது. என்றும், நீங்காது நிலைத்து நிற்கும் வாழ்வே உண்மையானது என்றும் கூறுவர். இதனை நீடுவாழ்தல் என்பர் வள்ளுவர். இந்த உண்மை வாழ்வைப் பெறுவதற்குப் பொருள்களின் இயல்பை உள்ளவாறு உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணருமாறு விளக்கும் ஞானநூல்களுள் திருமந்திரம் தனித்த இடத்தைப் பெறுகின்றது. ஆன்மீகமும், தத்துவமும், இறைஉணர்வும் கலந்த இந்நூலில் 9 தந்திரங்களும், 3000 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் முதல் தந்திரத்தில் முதல் பகுதியாக அமையும் உபதேசப் பகுதியை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

குருநாதர் பக்குவமுற்ற சீடனுக்கு மெய்ஞ்ஞானத்தைக் கூறுவதே உபதேசம் எனப்படும். வேதம், உபநிடதம் போன்றவை செவிவழியாகக் குருவிடமிருந்து சீடன் பெற்ற ஞானத்தை எடுத்தியம்புகின்றன. வயதில் முத்த அனுபவம் மிக்க சான்றோர், சிறியோர்க்குக் கூறும் அறிவுரையை முதுகாஞ்சி எனத் தொல்காப்பியம் மொழிகின்றது. கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும் பெரியோர் இளையோர்க்குக் கூறும் அனுபவ மொழிகள் உலகியலுக்குப்

பயன்தருவன. உலகியலைத் தாண்டிய அருளியலை நோக்கிய மெய்ஞ்ஞானப் பயணத்திற்கு வழிகாட்டுபவர்களாகக் குருமார்கள் விளங்கினர். தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின் எனும் தொடர், தெய்வ அருள்பெற்ற அருளாளர்களை அடையாளம் கண்டு, அவர்களைப் பணிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையைச் சுட்டுகின்றது. இவற்றை, மாதா பிதா குரு தெய்வம் எனும் வரிசை முறையாக்கி வைத்தனர். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனத் திருமூலர் கூறியதும் நினைவு கூறத்தக்கது.

## மலபரிபாகம்

உலக உயிர்களின் மலங்களைப் போக்கத் திருவுளம் கொண்டு இறைவனே குருவாக எழுந்தருளி உயிர்க்கு உயிராய் நின்று உள்ளத்தை உருகச்செய்து ஒப்புயர்வற்ற திருவருட் பார்வையால் முக்திநெறியைக் குறிப்பால் காட்டி பாசத்தை நீக்கினார் என்பதை,

விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு
தண்ணிற்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின்று உருக்கியோர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே (Subramanian Sastri, 1999)[1]

எனும் பாடல் விளக்குகின்றது.

மாணிக்கவாசகர், சிவபுராணத்தில் இறைவன் குருவாகி தமக்கு அருள் செய்த திறத்தைக், 'கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி, எண்ணுதற்கெட்டா எழிலார் கழலிறைஞ்சி' எனப்பாடுவது குறிப்பிடத்தக்கது.

மலக்கட்டினால் மூடப்பட்டிருந்த ஆன்மாக்களின் அருட்கண்ணைத் திறக்கச் செய்து பாசத்தை அறுத்து, அஞ்ஞான இருளை அணுகாத அருள்ஒளியைக் காட்டிய பாங்கின் இயல்பதாகிய ஆன்மாவில் சிவமாகிய பவளத்தைப் பதித்தான்.

சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே

எனத் திருவாசகம், மல நீக்கத்தையும், சிவமாக்கி அருள்செய்த தன்மையையும் விளம்புகிறது. சிவனே குருவாக வந்து உபதேசம் செய்யும் பேறு பெற்றவர் மாணிக்கவாசகர் (Umapathi Sivacharya, 1965)[2]. (கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க – சிவபுராணம்) பெத்த காலத்தில் ஊள் நின்று உணர்த்திய பதிப்பொருளே, முக்திக் காலத்தில் குருவாயும் வந்து உணர்த்துகிறது என்பதை, 'அறியாமை உண்ணின் றளித்ததே காணும், குறியாகி நீங்காத கோ' என்ற பாடல் உணர்த்துகின்றது (Subramanian Sastri, 1999)[3].

## முப்பொருள் உண்மை

பதி, பசு, பாசம் எனும் மூன்று பொருள்களும் என்றும் உள்ளவை. இவற்றுள் பசு. பாசம், எனும் இவ்விரண்டும் பதியைச் சென்று அணுகுவதில்லை. ஆனால், பதியாகிய திருவருள் கிட்டுமாயின் பசு, பாசம் எனும் இவ்விரண்டும் நீங்கி விடும் என்பதனைப் பின்வரும் பாடல் சுட்டுகிறது.

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்

பதியணு கிற்பசு பாசம் நில்லாவே (Umapathi Sivacharya, 1965)[2]

துன்பம்தரும் பாசத்தை விட்டு நீங்கி பசுவானது பதியைச்சேர எந்நாளும் இன்பமே! துன்பமில்லை எனக் குறளும் வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல மொழிகிறது. சம்பந்தர் தாமும் தம்மைச் சார்ந்த அனைவரும் சோதியில் கலக்கும்முன் பாடிய திருப்பெருமண நல்லூர்ப் பதிகத்தில், பந்த பாசம் அறுக்க வல்லவரே பரமனை அடைய முடியும் எனத் திண்ணமாகக் கூறுகிறார்(Ilankumaran ,2018)[3]. பந்த பாசம் அறுக்க வல்லார்களே (Umapathi Sivacharya, 1965)[2]. இறையருள் கிடைக்கும் போது பசு, பாசம், இரண்டுமே விலகுகின்றன. 'பசு, பாச மறுத்தருளி' என்கிறார் மாணிக்கவாசகர் (Umapathi Sivacharya, 1965)[2].

உடலெனும் கோவிலில் குடிகொண்ட சிவன், தாயினும் சாலப்பரிந்து மும்மலங்களை நீக்கிய ஞானசூரியனாக விளங்குகிறான். சூரியனின் வெப்பம் பட்டு சூரிய காந்தக்கல் பஞ்சை எரிப்பது போல் ஞானாசிரியரின் அருட்பார்வை ஆன்மாவின் அழுக்கைப் போக்கவல்லது. எல்லையிலாப் பரம்பொருளின்அருள் எழுச்சியே உயிர்நிலை, உயிரின் எழுச்சியாம் மனமே பிரிநிலைக்குக் காரணமான பாசநிலை என்பதை அறியமுடிகிறது. பசு எனப்படும் உயிர், பாச எழுச்சிக்கு இடம்தரின் பதியிடமிருந்து பிரிவையும், பாசஎழுச்சியை அடக்கிக் கொண்டால் பதியிடம் ஒன்றுதலையும் ஏற்படுத்தும்.

நிலையான பதி, அருள் எனும் அசைவால் அசையத் தொடங்கிய நிலையில் அதன்வீச்சு எழுச்சியாகப் பிரிந்து நிற்பதே உயிர் எனும் நிழல். இதனை வள்ளல் பெருமான், மாயையால் கலங்கி வருந்திய போதும் உன் சாயையாய்ப் பிறரைப் பார்த்ததே அல்லால் தலைவ வேறு எண்ணியது உண்டோ எனப்படுகிறார். உயிரின் சாயைதான் பதியின் நிழலேயன்றி வேறில்லை என்று உணர்ந்து ஒன்றுபட்டு உயரத்தடையாய் இருப்பது அறியாமை எனும் பாசநிலைதான்.

ஒரு பொருளின் மீது சூரியவெளிச்சம் படுகின்றது. சூரியன் பொருளுக்குக் கிழக்கேயும் மேற்கேயும் இருக்கும்போது நிழல் ஏற்படுகிறது. அதே சூரியன் பொருளின் நேர் உச்சிக்கு வந்த நொடியில் நிழல் இருப்பதில்லை. நிழலும் பொருளும் ஒன்றாகிப் போகின்றன. மனிதனிடம் சூரியன் போன்று நிழலை உருவாக்குவது மனம்தான். அந்த மனம் அசைவிலா நிலையாம் நடுநிலைக்கு வரும்போது உயிரும் அதன் மூலமாம் இறையும் ஒன்றாகிப் போகின்றன. இவ்வாறு நிழலும் நிஜமும் ஒன்றுபடும் நிலையை யோகம் என்பர். யோகம் என்பது ஒன்றுபடுதலைக் குறிக்கும். இதனை

சிவயோகம் ஆவது சித்து அசித்து என்று
தவயோகத்து உள்புக்குத் தன்ஒளி தானாய்
அவயோகம் சாராது அவன்பதிபோக
நவயோக நந்தி நமக்கு அளித்தானே

என்ற பாடலால் அறியலாம் (Subramanian Sastri, 1999)[4]. யாதொரு எண்ணமுமின்றி ஒன்றுமிலா ஒன்றோடு ஒன்றுபட்டு நிற்பதற்கு எம்பெருமான் நந்தி புதியதொரு யோக நெறியைத் தமக்களித்தான் எனத் திருமூலர் கூறுவதைப் போல, வள்ளலாரும் தான் அன்றி ஒன்று இலா ஜோதி – என்னைத் தன் மயமாக்கிய சத்திய ஜோதி தமது அனுபவத்தைக் கூறுகிறார்.

**திருவடிப்பேறு**

உயிரின் எல்லை எது? எனும் முயற்சியில் அசையாக நிறைந்து நிற்பதன் மூலம் அடி தானேயாக இருப்பதை உணரலாம். ஒப்பிட்டு ஒப்பிட்டுப் போய், தெளியத் தெளிய ஒப்பிலாத் திருவாகிய அடியாம் அசையாப் பெருநிலை (இறைநிலை) என்பது அனுபவம். அதுவே சிவலோகம் என சிந்தனையில் உதிக்கும். சிவம் என்றால் ஒன்றுபட்ட சுத்தவெளி. எல்லாம் சென்று சேரும் இடமாக இருப்பதும் திருவடியே. இதனைத் திருவடித் தியானம் எனக் கூறுவதோடு, பறை நடுவில் திருநடனம் புரியும் திருவடியே பெருவடிவு எனத் திருவருட்பா மொழிகிறது. போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர் எனத் தொடங்கும் திருவாசகப் பாடல் செந்தளிர்கள், பொற்பாதம், பூங்கழல்கள், புண்டரிகம், பொன்மலர்கள் எனத் திருவடியைப் பலநிலைகளில் போற்றுகிறது

யோகம் என்பது அகநோக்குப் பயணம். இவ்வகநோக்குப் பயணம் தடையின்றிச் செவ்வனே நிகழ புறம் பற்றிய தெளிவு வேண்டும். புறத்திலுள்ள பொருள்கள் யாவும் பொய் என்பதை, **'**இருப்பது பொய் போவது மெய்யென்று எண்ணி ஒருத்தருக்கும் தீங்கினை எண்ணாதே**'** என்பார் பட்டினத்தார். போவது மெய்யெனும் முக்திக்குச் சாதனமாகப் பரமகுருவாகிய சதாசிவன் ஒரு லட்சியத்தைக் காட்டுவான் (Subramanian Sastri, 1999)[4].

**குருஉபதேசம்**

குற்றமற்ற பாலில் நெய் கலந்தாற் போல், சலனமற்ற சிந்தையுள் அத்துவிதமாய் நிற்கும் சற்குருவானவர், சொல்வது யாதெனில் பேச்சற்று மௌன நிலையில் நிற்கும் தெளிவடைந்த உயிரானது வாழுதற்கு இடமாகிய உடல் நாசமுற்றால் எல்லையற்ற அருட்சோதியில் கலந்த சத்தாகும் என்கிறார்,

புரையற்ற பாலினுள் நெய்கலந்தாற் போல்
திரையற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற்று உணர்வோர் உடம்பிங்கு ஒழிந்தால்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே

என்ற பாடல் தெளிவுபடுத்துகிறது (Umapathi Sivacharya, 1965)[2].

ஆன்மத் தெளிவிற்கு மௌனம் மகத்தானது என்பதைச், சும்மாயிரு சொல்லற என்றலுமே எனும் அருணகிரிநாதர் வாக்கு மெய்ப்பிக்கிறது (Anand, 2017)[5]. சும்மாயிருக்கும் சுகம் என்பார் வள்ளலார் (Arunachulan, 2020)[6].

குருவின் திருமேனியைத் தரிசிப்பது, அவரது நாமத்தை உச்சரிப்பது, அவரருளும் உபதேச மொழிகளைக் கேட்பது, அவர் உருவாகிய மந்திரத்தைச் சிந்திப்பது இவையே மேலான நிலையை அளிக்கும் என்பதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே (Umapathi Sivacharya,1965)[2].

**முடிவுரை**

தன்னைப் பற்றியும், தான்வாழும் சூழ்நிலை பற்றியும் தெளிவாக உணர்ந்து செயல்பட்டால் செய்யும் செயல்கள் வெற்றியுடையனவாக விளங்கும் (Ponniah, 2020)[7]. மனித இனம் தன்னைப் பற்றியும், தன்மூலம் பற்றியும் மூலத்தினின்று தன்னைப் பிரித்து நிறுத்துகின்ற காரணங்கள் பற்றியும் தெளிவாக உணர்ந்து செயல்பட்டால் மனிதவாழ்க்கை துன்பத்தின் தொடர்கதை என்பது மாறி எந்நாளும் இன்பமயமானதே என்பது அறிவறிந்த ஞானியர் காட்டிய வழியாகும் (Ponniah, 2017)[8].

மூலமாகிய இறைநிலையும், அதன் புடைபெயர்ச்சியாகிய உலக நிலையும் பிரிநிலையாகிய உயிர்நிலையும் பற்றிய தெளிந்த ஞானத்தை அருளவல்லது திருமந்திரம், (Pama, 2018)[9]. மூலத்திலிருந்து உயிர் பிரிந்து நிற்பதற்குக் காரணமான பாசம், மலம், அறியாமை, மனம் ஆகியவை ஆகும் (Kanesan, 2020)[10]. அதன் இயல்புகளால் பல பெயர்க்கு உரிமை கொண்டாடும் மனம் பற்றிய தெளிவான அறிவைப் புகட்டி தடைகளை விலக்கி உயிரை அதன் மூலத்தோடு என்றும் ஒன்றி இருக்கச் செய்யும் (Chapman, 1999)[11]. இது வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்கு எழுந்த நூல்தான் திருமந்திரம் என்பதை உபதேசப்படுத்துகின்ற விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**Refrences:**


1. Subramanian Sastri., P. S. (1999). *Tolkāppiyam: Poruḷatikāram [Tholkapiyam Subject]*. Kuppuswami Sastri Research Institute. Chennai: Gnanasambandhar Devaram Kazhaga Publishers.
2. Umapathi Sivacharya. (1965). *Thiruvarutpayan [Fruits of Grace]*. Chennai: Saiva Sidandam Publishers.
3. Ilankumaran, R. (2018). *Tirukkuṟaḷ vāḻviyal viḷakkavurai [Tirukkural life-skill exegesis]*. Ariyalur, India: Paavendhar Padhippagam. Chennai: Thirumandiram vardamanan Publication.
4. Subramanian Sastri, P. S. (1999). *Tolkāppiyam: Poruḷatikāram [Tholkapiyam Subject]*. Kuppuswami Sastri Research Institute. Chennai: Gnanasambandhar Devaram Kazhaga Publication.
5. Anand, G., Menon, S. (2017). Body, Self and Consciousness according to Tirumūlar's Tirumandiram: A comparative study with Kashmir Śaivism. Int. J. Dharma Studies 5, 3 (2017). https://doi.org/10.1186/s40613-016-0045-5.
6. Arunachulan, A., & Karunanithi, G. (2020). Caivam kātta cāṉṟōr [Scholars – the protectors of saivism]. *Muallim Journal of Social Sciences and Humanities*, *4*(3), 23-38. https://doi.org/10.33306/mjssh/79.
7. Ponniah, K., Deverraju, M., Sathiyamoorthy, B., & Kassymova, G. K. (2020). Almsgiving or services by the Indian NGO'S of Port Dickson based on sariyai in Periya Puranam. *Psychology and Education Journal*, *57*(8), 239-249.
8. Ponniah, K., & Thamburaj, K. P. (2017). Chinese Community's Involvement in Thaipusam Celebration at Sungai Petani Sri Subramanian Swami Devasthanam. *Man in India*, *97*(24), 17-27.
9. Pama, P. (2018). Tamil film songs that simplify the teaching of poetry [*கவிதை கற்பித்தலை எளிமைப்படுத்தும் தமிழ்த் திரை இசைப் பாடல்கள்*]. *Muallim Journal of*

*Social Sciences and Humanities*, *2*(4), 302-314. Retrieved from https://mjsshonline.com/index.php/journal/article/view/76.

10. R. Kanesan, S. Ilangkumaran, & T. Jansirani. (2020). 21-am katral karppittalil naavalkalait taluvi uruvaakkappadum tiraippadanggal oor aaivu [21-st century study on adaptation of novels in films]. *Muallim Journal of Social Sciences and Humanities*, *4*(4), 53-59. https://doi.org/10.33306/mjssh/96.
11. Chapman, C. R., & Nakamura, Y. (1999). A passion of the soul: an introduction to pain for consciousness researchers. *Consciousness and Cognition*, *8*(4), 391-422.